1975 ஏப்ரல் 15]

Branch Channel at Kalluvilai.

*665 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide a branch channel at Kalluvilai in Killiyoor village, Kanyakumari district under the Chittar-Pattanamkal Scheme?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தக் கல்லுவிளைக்கு வாய்க்கால் வெட்டுவது அந்தப் பகுதிக்குத் தேவை. அது வறட்சி மிகுந்த பகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியிலே இதை விஸ்தரித்துக் கொடுத்தால் அது சிறப்பாக இருக்கும். ஆதலால், அதைப் புனர் பரிசீலனை செய்ய அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வாய்க்கால் வெட்டினுல் , வாய்க்கால் பாயவேண்டிய பூமி, உயரமாக இருக்கிற காரணத்தால், நீர் பாய முடியவில்லை. ஆகவே, தடுப்புச் சுவர் கட்ட வேண்டியிருக்கிறது. தடுப்புச் சுவர் கட்டி தண்ணீர் ஏற்ற வேண்டியிருக்கும். அதற்காகச் செலவு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும், பட்டணங்கால் திட்டம் தனது 15,000 ஏக்கர் இலக்கை அடைந்து விட்ட காரணத்தால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இலக்கு 15,000 ஏக்கராக இருக்கிறது. ஆனுல், தண்ணீர்போய்ச் சேருவதில்லை. டெய்ல் எண்டில் ஒழுங்காகத் தண்ணீர்விட வழியில்லாமலிருக்கிறது. காரணம் குலசேகரம் பக்கத்திலே இருக்கிற ஃப்ளூம் குறைவாக இருக்கிறது. ஃப்ளூம் அதிகமாக இருந்தால்தான் தண்ணீர் போய்ச் சேர முடியும். ஆகவே, ஃப்ளூம்மை விஸ்தரிக்கச் செய்தோ, அல்லது உயரத்தைக் கூட்டினுலோ தான் தண்ணீர் வரும். அதைச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

விலைவாசிகள் மீது கண்காணிப்பு.

* 666 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—